முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 331/2018**

திருமதி. அமுதவள்ளி (D.W –1) **16.08.2023.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1. சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். எஸ். ஜி. ஆர் நகரில் நான் மனையிடம் வாங்கினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் எஸ். ஜி. ஆர் நகரில் 3 1/2 செண்ட்டுகளாக எந்த பிளாட்டும் இல்லை. நான் 3 1/2 செண்ட்டும் பெரியசாமி என்பவர் 3 1/2 செண்ட்டும் வாங்கினோம். பெரியசாமி என்பவர் வாங்கிய பத்திரத்தின் ஆண்டு 1994 என்றால் சரிதான். நான் 3 1/2 செண்ட்டுக்களாக கிரையம் பெறவில்லை என்றாலும் ஆனால் தற்போது 3 1/2 செண்ட்டுக்களாக கிரையம் பெற்றதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் ஏ செட்டியூல் கண்ட க.ச.எண். 487 உள்ள புஞ்சை ஏக்கர் 1.68 3/4 பூமியானது சுப்பராய கவுண்டருக்கும் பி செட்டியூல் கண்ட க.ச.எண். 487 உள்ள புஞ்சை ஏக்கர் 1.68 3/4 மற்றும் 1.35 ஏக்கர் பூமியானது சின்னசாமி என்பவருக்கும் பாத்தியம் என்பதை ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேன். ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேன் என்பதை முதல் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. சுப்பராய கவுண்டர் மற்றும் சின்னசாமி ஆகியோர் சொத்துக்கள் சேர்ந்து 3.37 1/2 ஏக்கர் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. சுப்பராய கவுண்டர் மற்றும் சின்னசாமி ஆகியோருக்கு ஏ மற்றும் பி செட்டியூல் சொத்துக்கள் சேர்ந்து 4.72 ஏக்கர் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. எனக்கு ஒதுக்கப்பட்ட இடமானது க.ச.எண். 487 ல் ஒரு பகுதியான 1.35 ஏக்கர் தான் மனையிடங்களாக பிரிக்கப்பட்டு அதில் எனக்கு ஒரு

பகுதி இடம் சுப்பராய கவுண்டரும் சின்னசாமி கவுண்டரும் ஒதுக்கினார்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அதன் காரணமாகத்தான் வாதி வில்லங்கச் சான்றிதழ் போடும் போது என் பெயரோ, 2ம் பிரதிவாதி பெயரோ, 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பெரியசாமி பெயரோ வரவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

3. நான் தாவாச்சொத்தை வாங்கிய பிறகு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வில்லங்கம் சான்றிதழ் எதுவும் வாங்கவில்லை. நான் தனிப்பட்ட முறையில் இதே சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்து அது சமூகம் நீதிமன்றத்தில் அ.வ.எண். 395/2018 மற்றும் 397/2018 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேலே கண்ட வழக்குகளில் சொத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. 1996ல் முருகவேல் என்பவர் தான் தாவாச்சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. முருகவேல் இறந்த பிறகு அவரது மனைவி சுப்புலட்சுமி, அவரது தாயார் பாக்கியலட்சுமி, மைனர் பிரேம்குமார், மைனர் பிரதாப்குமார் ஆகியோர் முருகவேல் அவர்களின் வாரிசுகள் என்றாலும் அவர்கள் சேர்ந்து மதிவாணன் மற்றும் சதீஸ் குமார் என்பவருக்கு தாவாச்சொத்தை கிரையம் செய்த விவரம் எனக்குத் தெரியாது. அதன் பிறகு மதிவாணன் மற்றும் சதீஸ்குமாரும் சேர்ந்த 23.11.2011 ஆம் தேதி தங்கம் என்பவருக்கு தாவாச்சொத்தை விற்பனை செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 2016 ஆம் ஆண்டு வாதி தங்கம் என்பவரிடம் கிரையம் வாங்கினார் என்றால் அது பற்றி தெரியாது.

4. நான் தாவா இடத்தில் வீடு கட்டப் போகும் போது தான் வாதி வாங்கிய விவரம் தெரிய வந்தது. தாவா இடத்தில் வீடு கட்டுவதற்கு என்ன என்ன பொருட்கள் வாங்கி வைத்திருந்தோம் என்றால் ஓடு மணல், ஜல்லி வைத்திருந்தோம். மழையில் மணல் அடித்துக்கொண்டு சென்று விட்டது. சிமெண்ட்

வீணாகிவிட்டது. அவ்வாறு வீடு கட்டுவதற்கு பொருட்களை வாங்கி வைத்தற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. தாவாச்சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. ஆகவே வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய இடம் வேறு இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– பா.செல்லதுரை.,
முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.